DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : STC.No.413/2021 | Deposition of Witness for : DW3 |
| Name : முத்துமாரி | Father/Husband Name : ஜெயக்கொடி |
| Age : 49 | Village : பெரியதாழை |
| Taluk : சாத்தான்குளம் | Calling : கூலிவேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24 April 2026.
Complainant present. Accused present.

**<u>எதிரி தரப்பில் 3 ஆவது சாட்சியின் முதல் விசாரணை :-</u>**

1. நான் தற்போது பெரியதாழையில் குடியிருந்து 100 நாள் வேலை திட்டத்தில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும், என்னுடைய தம்பி ஜெயகாந்தின் மனைவி ஆவார், ஆஜர் எதிரிக்கு 2 குழந்தைகள் உள்ளனர், ஒரு மகன், ஒரு மகள் ஆவார். அவருடைய மகளின் பெயர் ராஜலெட்சுமி ஆகும். ஆஜர் எதிரியின் மகளான ராஜலெட்சுமிக்கு பூப்புனித நீராட்டு விழா 17.11.2024 அன்று நடைபெற்றது. அந்த பூப்புனித நீராட்டு விழாவிற்கான அனைத்து செலவுகளையும் நான் செய்தேன். என்னிடம் காட்டப்படும் வாழ்த்து மடலை நானும் எனது கணவரும் எதிரியின் மகளுக்கு கொடுத்தோம். **அந்த வாழ்த்து மடலின் நகல் (அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது) எ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மனுதாரரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது).** பூப்புனித நீராட்டு விழாவில் 200 முதல் 300 நபர்கள் கலந்து கொண்டார்கள். இந்த வழக்கின் மனுதாரர் சுவீட்டா என்பவர் இந்த வழக்கோடு சேர்த்து திருச்செந்தூர் நீதிமன்றத்திலும் ஒரு வழக்கை எதிரிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் வார வட்டிக்கு கொடுக்கும் வேலை செய்து வருகிறார், வட்டி கொடுக்க தவறினால் கடுமையாக பேசுவார். மனுதாரருக்கும் எதிரிக்கும் இடையே ஏதாவது கொடுங்கல் வாங்கல் இருந்ததா என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் தான் பூப்புனித நீராட்டு விழாவை முன்னின்று நடத்தி வைத்தேன்.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

2. எ.சா.ஆ.4 வாழ்த்து மடல் எங்கே தயாரிக்கப்பட்டது என்பதற்கான பில் எதுவும் நான் நீதிமன்றத்திற்கு கொண்டுவரவில்லை என்றால் சரிதான். ராஜலெட்சுமிக்கு தற்போது என்ன வயது இருக்கும் என்றால் 15 வயது இருக்கும். ராஜலெட்சுமி என்பவர் பூப்பெய்திய பிறகு எவ்வளவு நாட்கள் கழித்து பூப்புனித நீராட்டு விழா எடுக்கப்பட்டது என்றால் 4 வருடங்கள் கழித்து நடைபெற்றது. பொதுவாக ஒரு பெண் வயதுக்கு வந்துவிட்டால் அந்த தேதியில் இருந்து 3 நாட்கள் அல்லது 5 நாட்களில் சிறிய அளவில் விழா எடுக்கப்பட்டு முடிப்பார்கள் என்றால் சரிதான். ராஜலெட்சுமி வயதுக்கு வந்தபிறகு தலைக்கு தண்ணீர் ஊற்றும் சடங்கு நடைபெற்றது என்றால் சரிதான். தலைக்கு தண்ணீர் ஊற்றும்


DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.04.24 17:25:09 +0530

சடங்கிற்கு என்னுடைய ஊரில் இருக்கும் நெருங்கிய நண்பர்கள் மற்றும் பழக்கமானவர்களை அழைத்து தேநீர் கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான், ராஜலெட்சுமி வயதுக்கு வந்த சமயத்தில் சிறியதாக விழா எடுக்கப்பட்டு ஊரில் உள்ள நபர்களுக்கு தேநீர் விருந்து மட்டும் கொடுக்கப்பட்டது.

3. எ.சா.ஆ.4 ஆவணத்தில் ராஜலெட்சுமி என்ற பெயர் உள்ளதா என்றால் இல்லை. எ.சா.ஆ.4 வாழ்த்து மடல் எதிரியின் வேண்டுகோளுக்கிணங்க நான் தயார் செய்து நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னுடைய தம்பியின் மனைவி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி, ராஜலெட்சுமி என்பவர் சடங்கு ஆன சமயத்தில் என்ன தொழில் செய்து வந்தார்கள் என்றால் வேலைக்கு செல்லவில்லை, வீட்டில் இருந்து வந்தார்கள். ஆஜர் எதிரி சுவிட்டாவிடம் தனது மகளுக்கு சடங்கிற்கு பணம் கடன் வாங்கியதை மறைப்பதற்காக நான் உறவினர் என்பதால் என்னை நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல அழைத்தார்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V — Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.04.24 17:25:15 +0530

Judicial Magistrate, Sathankulam.